# தமிழ் புதிர்களும் விடைகளும்

## பகுதி - 1

1. அடிமேல் அடி வாங்கி அனைவரையும் சொக்க வைக்கும். அது என்ன?
2. அடித்து நொறுக்கி அணலில் போட்டால் ஆவியாகத் தோன்றி அழகாய் மணக்கும். அது என்ன?
3. அச்சு இல்லாத சக்கரம் அழகு காட்டும் சக்கரம். அது என்ன?
4. அறிவின் மறுபெயர் இரவில் வருவது. அது என்ன?
5. பிறந்தது முதல் வயிற்றாலே போகிறது. அது என்ன?
6. ஆயிரம் தச்சர் கூடி கட்டிய அந்த அழகான மண்டபம் ஒருவர் கண்பட்டு உடைந்ததாம் அந்த மண்டபம். அது என்ன?
7. எட்டாத ராணியாம் இரவில் வருவாள் பகலில் மறைவாள் அது யார்?
8. ஒளி கொடுக்கும் விளக்கு அல்ல சூடு கொடுக்கும் தீ அல்ல பளபளக்கும் தங்கம் அல்ல. அது என்ன?
9. அள்ளவும் முடியாது கிள்ளவும் முடியாது. அது என்ன?
10. ஒற்றைக்கால் மனிதனுக்கு ஒன்பது கை. அது என்ன?

**விடைகள்:**

| | |
|---|---|
| 1. மிருதங்கம் | 2. சாம்பிராணி |
| 3. வளையல் | 4. மதி |
| 5. பாம்பு | 6. தேன் கூடு |
| 7. நிலா | 8. சூரியன் |
| 9. காற்று | 10. மரம் |

## பகுதி - 2

11. ஒற்றைக்கால் குள்ளனுக்கு எட்டுக் கை. அது என்ன?
12. ஊருக்கெல்லாம் ஓய்வு உழைப்பவர்க்கும் ஓய்வு இவனுக்கு மட்டும் ஓய்வில்லை இரவும் பகலும் ஓட்டந்தான். அது என்ன?
13. ஒற்றைக் காலில் ஆடுவான் ஓய்ந்து போனால் படுப்பான் அவன் யார்?
14. பகலிலே வெறுங்காடு இரவெல்லாம் பூக்காடு. அது என்ன?
15. அனைவரையும் நடுங்க வைப்பான் ஆதவனுக்கே அடங்குவான். அது என்ன?

**16.** உணவு கொடுத்தால் வளரும் நீர் கொடுத்தால் அழியும். அது என்ன?

**17.** ஊசி போல் இருப்பான் ஊரையே எரிப்பான். அது என்ன?

**18.** தண்ணீர் இல்லாமல் வளரும் தரை இல்லாமல் படரும். அது என்ன?

**19.** இதயம் போல் துடிப்பிருக்கும் இரவு பகல் விழித்திருக்கும். அது என்ன?

**20.** நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய். அது என்ன?

**விடைகள்:**

| | |
|---|---|
| **11.** குடை | **12.** மூச்சு |
| **13.** பம்பரம் | **14.** வானம் |
| **15.** குளிர் | **16.** நெருப்பு |
| **17.** தீக்குச்சி | **18.** உரோமம் |
| **19.** கடிகாரம் | **20.** நாய் |

## பகுதி - 3

**21.** உயரத்தில் இருப்பிடம் தாகம் தீர்ப்பதில் தனியிடம். அது என்ன?

**22.** தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம். அது என்ன?

**23.** எட்டுக்கால் ஊன்றி இருகால் படமெடுக்க வட்டக் குடைபிடித்து வாறாராம் வன்னியப்பு. அது என்ன?

**24.** படபடக்கும் பளபளக்கும் மனதுக்குள் இடம் பிடிக்கும். அது என்ன?

**25.** சங்கீதம் பாடுபவனுக்கு சாப்பாடு இரத்தம். அது என்ன?

**26.** கந்தல் துணிக்காறி முத்துப் பிள்ளைகள் பெற்றாள் அவள் யார்?

**27.** மரத்திற்கு மேலே பழம் பழத்திற்கு மேலே மரம். அது என்ன?

**28.** ஊசி நுழையாத கிணற்றிலே ஒரு படி தண்ணீர்?

**29.** நாளெல்லாம் நடந்தாலும் நாற்பதடி செல்லாது அந்த நாயகனுக்கோ உடல் மேல் கவசம். அது என்ன?

**30.** ஏரியில் இல்லாத நீர் தாகத்திற்கு உதவாத நீர் தண்ணீர் அல்ல. அது என்ன?

**விடைகள்:**

| | |
|---|---|
| **21.** இளநீர் | **22.** அன்னாசிப்பழம் |
| **23.** நண்டு | **24.** பட்டாசு |
| **25.** நுளம்பு | **26.** சோளப்பொத்தி |
| **27.** அன்னாசிப்பழம் | **28.** தேங்காய் |
| **29.** நத்தை | **30.** கண்ணீர் |

## பகுதி - 4

**31.** கண்ணீர் விட்டு வெளிச்சம் தருவாள் அவள் யார்?

**32.** தலைக்குள் கண் வைத்திருப்பவன் இவன் மட்டும்தான் அவன் யார்?

**33.** உணவை எடுப்பான் ஆனால் உண்ணமாட்டான் அவன் யார்?

**34.** ஒற்றை கிண்ணத்துக்குள் இரட்டைத் தைலங்கள் அவை எவை?

**35.** ஒட்டியவன் ஒருத்தன் பிரித்தவன் இன்னொருவன். அது என்ன?

**36.** வெள்ளத்தில் போகாது வெந்தணலில் வேகாது கொள்ளையடிக்க முடியாது கொடுத்தாலும் குறையாது. அது என்ன?

**37.** பொட்டுப்போல் இலை இருக்கும் பொரிபோல் பூப் பூக்கும் தின்னக்காய் காய்க்கும் தின்னாப் பழம் பழுக்கும். அது என்ன?

**38.** தண்ணீரில் பிறப்பான் தண்ணீரில் இறப்பான் அவன் யார்?

**39.** குண்டு குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்தே இருக்கும் அவன் யார்?

**40.** கண்ணில் தென்படுவான் கையில் பிடிபட மாட்டான் அவன் யார்?

**விடைகள்:**

| | |
|---|---|
| **31.** மெழுகுதிரி | **32.** நுங்கு |
| **33.** அகப்பை | **34.** முட்டை |
| **35.** கடிதம் | **36.** கல்வி |
| **37.** முருங்கைமரம் | **38.** உப்பு |
| **39.** கத்தரிக்காய் | **40.** புகை |